கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 133 | 18-11-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 133 | 18-11-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy

## பிஹாரில் நவ.20 புதிய அரசு பதவியேற்பு: பிரதமர் மோடி பங்கேற்பு: முதல்வர் யார்?



பாட்னா: நவ.18–

பிஹாரில் புதிய அரசு நவம்பர் 20 ஆம் தேதி பாட்னாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க காந்தி மைதானத்தில் பதவியேற்க உள்ளது. இருப்பினும் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதிஷ் குமார் பத்தாவது முறையாக முதல்வராக பதவியேற்பாரா என்பது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு மட்டும் இன்னும் வெளியாகவில்லை.

பிஹாரில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் புதிய அரசு அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வரும் நிலையில், பிரதமர் நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் கலந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிஹார் சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் போது உரையாற்றிய பிரதமர் மோடி, "புதிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தின் பதவியேற்புக்கு மீண்டும் வருவேன்." என்று உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போதுள்ள அமைச்சரவையை கலைப்பதற்காக, நிதிஷ் குமார் அமைச்சரவைக் கூட்டத்தை நடத்தினார். அதைத் தொடர்ந்து நிதிஷ்குமார் தனது ராஜினாமாவை ஆளுநர் ஆரிஃப் முகமது கானிடம் சமர்ப்பிப்பார். அதன்பின்னர் தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள கட்சிகள் இணைந்து அடுத்த முதல்வர் மற்றும் அமைச்சரவை குறித்த முடிவுகளை எடுக்கும். இதனை தொடர்ந்து புதிய அரசு அமைக்க ஆளுநரிடம் உரிமை கோரப்படும்.

243 உறுப்பினர்களைக் கொண்ட பிஹார் சட்டப்பேரவையில் தேசிய ஜனநாயக கூட்டணி 202 இடங்களைப் பெற்று, மிகப்பெரிய பெரும் பான்மையைப் பெற்றது. பாஜக அதிகபட்சமாக 89 இடங்களைப் பெற்றது, அதைத்தொடர்ந்து ஜேடியு 85 இடங்களைப் பெற்றது. மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வானின் எல்ஜேபி 19 இடங்களை வென்றது. இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா 5இடங்களையும் மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா 4இடங்களையும் வென்றன. ஆர்ஜேடி தலைமையிலான மகா கூட்டணி 35 இடங்களை மட்டுமே வென்றது.

பிஹாரில் ஆட்சி அமைப்பது தொடர்பாக பாஜகவின் உயர்மட்டத் தலைவர்களை சந்திக்க டெல்லியில் இருந்த ஜேடியு செயல் தலைவர் சஞ்சய் குமார் ஜா நேற்று நிதிஷ் குமாரைச் சந்தித்தார். செய்தியாளர்களிடம் அவர், "சில நாட்களில், புதிய அரசாங்கம் அமைக்கப் படும். சரியான நேரத்தில் நீங்கள் விவரங்களை அறிந்து கொள்வீர்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அறிக்கையில் நாங்கள் அளித்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம்." என்று கூறினார்.

2020 தேர்தலில் 50க்கும் குறைவான எம்எல்ஏக்கள் மட்டுமே இருந்ததால் குறைவான அமைச்சர்களை பெற்ற ஐக்கிய ஜனதா தளம், இம்முறை அமைச்சரவையில் அதிக இடங்களை கேட்டுள்ளது. இதற்கிடையில், எல்ஜேபி கட்சி புதிய அரசாங்கத்தில் சேர ஆவலுடன் இருப்பதாக சிராக் பாஸ்வான் கூறினார். அதே நேரத்தில் எல்ஜேபி துணை முதல்வர் பதவியை எதிர்பார்ப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேபோல இந்துஸ்தானி அவாம் மோர்ச்சா மற்றும் ராஷ்ட்ரிய லோக் மோர்ச்சா கட்சிகளும் அமைச்சரவையில் இடம் கேட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## "சவுதி விபத்தில் 42 இந்தியர்கள் பலியான சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது: மு.க.ஸ்டாலின்



துபாய், நவ.18–

சவுதி அரேபியாவில் பேருந்து விபத்துக் குள்ளானதில் 42 இந்தியர்கள் உயிரிழந்தனர். அவர்களில் பலர் இந்தியாவின் தெலுங்கானா மாநிலத்தில் இருந்து சென்றவர்கள் என்பதும், அனைவரும் சவுதி அரேபியாவின் மெக்கா நகரில் இருந்து மெதினா நோக்கி உம்ரா புனித பயணம் மேற்கொண்டவர்கள் என்பதும் தெரிய வந்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு இந்திய அரசியல் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், இந்த விபத்து தொடர்பாக முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; "மதீனா அருகே நடந்த துயரமான பேருந்து விபத்தில் பல இந்திய உம்ரா யாத்ரீகர்கள் உயிரிழந்த சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த துயரமான நேரத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள், தேவையான மருத்துவ சிகிச்சை பெற்று விரைவில் குணமடைவார் என்று நம்புகிறேன்." இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. ",

## பாமக யாருடன் கூட்டணி? விரைவில் அறிவிப்பதாக ராமதாஸ் தகவல்



சட்டப்பேரவை தேர்தலுக்கு யாருடன் கூட்டணி அமைக்கப் படும் என்று விரைவில் அறிவிப்பதாக பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை பாமக கிழக்கு மாவட்டம் சார்பில் நெமிலியில் நேற்று பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் கட்சியின் நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது: மதுப் பழக்கத்தை ஒழித்தால் தான் சமுதாயமும், நாடும் முன்னேறும். விவசாயிகள் விளைவிக்கும் பொருட்களுக்கு சரியான விலை கிடைக்க வேண்டும். ஏழைக்கு ஒரு கல்வி, நடுத்தர மக்களுக்கு ஒரு கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு கல்வி என்பதுபோல கல்வியின் நிலைமை உள்ளது. வன்னியர்களுக்கு மட்டுமின்றி மாநிலத்தில் உள்ள அனைத்து சாதிகளுக்காகவும் போராடி வருகிறது பாமக.

வன்னியர்களுக்கு 10.5 சதவீத இடஒதுக்கீடு வழங்க வேண்டும், இதற்காக சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற 2 கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் 12ம் தேதி மிகப்பெரிய போராட்டம் நடத்தப்பட உள்ளது. சட்டப்பேரவை தேர்தலுக்காக யாருடன் கூட்டணி என விரைவில் முடிவெடுக்கப்படும். அந்த கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும். தேர்தலுக்காக பெண்கள் 500, 1000 ரூபாய் வாங்குவதை தவிர்க்க வேண்டும். வாக்குக்கு பணம் வாங்க மாட்டோம் என உறுதியாக இருக்க வேண்டும். பெண்கள் உறுதியாக இருந்தால் நல்லாட்சி அமையும். இவ்வாறு அவர் பேசினார்.

## கேரளாவில் மூளையை தின்னும் அமீபா அச்சுறுத்தல்: சுகாதாரத்துறை வெளியிட்ட அறிவுறுத்தல்

"திருவனந்தபுரம், நவ.18–

கேரளாவின் பல்வேறு பகுதிகளில் மூளை தின்னும் அமீபா என அழைக்கப்படும் அமீபிக் மெனிங்கோ என்செபாலிடிஸ் என்ற நோய் பரவி வருகிறது. இதற்கிடையே, சபரிமலையில் இவ்வாண்டு மண்டலரு மகர விளக்கு பூஜைக்காக இன்று நடை திறக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து தினமும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சபரிமலைக்கு தரிசனத்திற்காக வந்து செல்லவுள்ளனர். சபரிமலை செல்லும் பக்தர்கள் நீர்நிலைகளில் குளிக்கும்போது மூக்கிற்குள் நீர் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கொண்டும், பல அறிவுறுத்தல்களை அந்த மாநில சுகாதாரத்துறை வழங்கியுள்ளது. இந்த நிலையில், தமிழக சுகாதாரத்துறையும் பக்தர்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது. தமிழக சுகாதாரத்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பது:"கேரளாவில் மூளையை உண்ணும் அமீபா நோய் பரவும் நிலையில் சபரிமலை செல்லும் பக்தர்கள் அச்சப்பட வேண்டாம். சபரிமலை சென்று வந்து 3 நாட்களுக்கு பின் காய்ச்சல், உடல் வலி இருந்தால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல வேண்டும். ஆறுகள், குளம் போன்ற நீர்நிலைகளில் குளிக்கும்போது மூக்கினுள் நீர் செல்லாமல் கவனமாக இருக்க வேண்டும். கொதிக்க வைத்த நீரை பருகவும். மலை ஏறும் போது மெதுவாக இடைவெளி விட்டு ஏறவும். கொரோனா தொற்று போல அமீபா பரவாது என்பதால் சபரிமலை செல்வோர் அச்சப்பட தேவையில்லை." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.",



சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா அமைச்சர் இரா. ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி மாநிலங்களவை உறுப்பினர் சிவலிங்கம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், சேலம் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம், மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி, சேகோசர்வ் மேலாண் இயக்குனர் கீர்த்திபிரியதர்ஷினி, ஆவின் பொது மேலாளர் குமரசேன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கூடுதல் பதிவாளர்/ மேலாண்மை இயக்குனர் குழந்தைவேலு சேலம் மண்டல கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் சுபராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.

## திருவள்ளூரில் 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா :
## 2124 பயனாளிகளுக்கு ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகள்
### அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் ஆகியோர் வழங்கினார்



திருவள்ளூர் நவ 18 :

திருவள்ளூர் ஜே.என். சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவு துறை சார்பில் 72 ஆவது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் 2124 பயனாளிகளுக்கு ரூ.23.81 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் முன்னிலையில் வழங்கி பேசினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள், மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, 122 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 2 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள். 1நகர கூட்டுறவு வங்கி. 10 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 53 பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள். 3 வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் இதர கூட்டுறவு நிறுவனங்கள் உட்பட மொத்தம் 227 கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாக மக்களுக்கு தேவையான கடன்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு தேவையான பயிர் கடன்கள். விதை, உரங்கள். இடுபொருட்கள் விநியோகம் செய்வதுடன் குறுகியகால மற்றும் மத்தியகால வேளாண் கடன்கள் வழங்கி உணவு உற்பத்திக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும். கூட்டுறவு சங்கங்கள் கிராமங்கள் தோறும் தங்களது சேவையினை செய்து வருகின்றன. திருவள்ளூர் மண்டலத்தில் உள்ள 51543 குடும்ப அட்டைதாரர்கள் பயன் பெற்று வருகின்றனர். மேலும், நியாய விலைக் கடைகளின் குடும்ப அட்டைதாரர்கள் பயனுறும் வகையில் 27 சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் மூலம் மளிகைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என அமைச்சர் கூறினார்.

முன்னதாக பல்வேறு துறைகள் சார்பில் அமைக்கப்பட்ட அரங்குகளை பார்வையிட்டு, 2 பயளானிகளுக்கு தலா ரூ.7 இலட்சம் மதிப்பில் பண்ணை சார்ந்த மத்திய கால கடனாக 2 டிராக்டர்களை ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அமைச்சர் வழங்கினார். அதனைத் தொடர்ந்து பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, கதை சொல்லும் போட்டி, ஓவியப் போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ் களையும் கேடயங்களையும், கருணை அடிப் படையில் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளையும், 2 சிறந்த கூட்டுறவாளர்களை பாராட்டி நினைவு பரிசுகளை வழங்கி சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு நிறுவனம் மற்றும் சங்களுக்கு கேடயங்களையும் தாயுமானவர் திட்டத்தின் கீழ் சிறப்பாக செயலாற்றிய விற்பளையாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ் களையும், பல்வேறு மகளிர் சுய உதவிக்குழு, பயிர்க்கடன், கால்நடை பராமரிப்பு கடன், சிறுவணிக கடன், மாற்றுத்திறனாளி கடன் என 2124 நபர்களுக்கு மொத்தம் ரூ.23,80,67,013 மதிப்பிலான கடன் உதவிகளையும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தலைமையில் அமைச்சர் வழங்கினார்.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.ஜி இராஜேந்திரன் (திருவள்ளூர்), எஸ்.சந்திரன் (திருத்தணி) கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் பா.ஜெயஸ்ரீ, கூடுதல் பதிவாளரும் காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநருமான ஆ.க.சிவமலர், திருவள்ளூர் நகர்மன்ற தலைவர் பா.உதயமலர் பாண்டியன், திருத்தணி சரகம் துணை பதிவாளர் சி.அமுதா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கோவை செம்மொழி பூங்கா பணிகள் அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு



கோவை நவ:18

கோவையில் அமைக்கப்பட்டு வரும் செம்மொழி பூங்கா பணிகளை நகராட்சி துறை அமைச்சர் கே.என்.நேரு நேரில் ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், பூங்கா பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும், இந்த மாத இறுதியில் முதல்வர் பூங்காவை திறந்து வைப்பார் என்றும் தெரிவித்தார்.

மேலும், பணிகளை விரைவாக முடிக்க உத்தரவிட்டுள் ளோம். இன்னும் இரண்டு முதல் மூன்று வேலைகள் மட்டும் பாக்கி உள்ளது. பிளே ஏரியா,வாட்டர் கார்டன், பேட் பே ஏரியா உள்ளிட்ட நான்கு பணிகள் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 23 பணிகளில் நான்கு பணிகள் மட்டும் மீதம். ஒரு வாரத்தில் முழு பணிகளும் முடிந்து, இந்த மாத இறுதிக்குள் பூங்கா பயன்பாட்டுக்கு வரப்படும் என கூறினார்.

பூங்கா பணிக்காக ஏற்கனவே ரூ.167.25 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில், கூடுதலாக ரூ.47 கோடி வழங்கப்பட்டு மொத்தம் ரூ.214.25 கோடியில் பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

பீகார் தேர்தல் வெற்றி தமிழகத்தில் எதிரொலிக்கும் என பாஜக கூறியதை எதிர்த்து, “பாஜக வேறு என்ன சொல்வார்கள்? தேர்தலில் ஜெயிப்பது நாங்கள்தான்; அதை நாங்களே பார்த்துக் கொள்கிறோம்” என அமைச்சர் பதிலளித்தார்.தவெக தலைவர் விஜய் கூறிய ‘யாரும் ஓட்டு போட முடியாத நிலை வரும்’ என்ற கருத்து குறித்து அமைச்சர், “68,000 பேர் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு பூத்துக்கும் ஙிலிளி நியமிக்கப்பட்டுள்ளார். வாக்காளர் பட்டியலில் குளறுபடி இல்லை. 90% விண்ணப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன. புதியதாக சேர்ப்பவர்களுக்கு Form 6 வழங்கப்பட்டு வருகிறது. 30 நாள் சேர்ப்பு பணி முடிந்தவுடன் அடுத்த 30 நாட்கள் சரிபார்ப்பு நடைபெறும். ஓட்டு சேர்ப்பதற்கான முயற்சிகளை அரசு செய்யிறது” என்றார்.

குப்பையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் சென்னையில் தொடங்கியுள்ளதாகவும், இது கோவை மற்றும் மதுரையிலும் விரைவில் தொடங்கப்படும் 25 ஆண்டு திட்டம் என்றும் தெரிவித்தார்.

திமுக – தவெக போட்டி குறித்து விஜய் கூறியதற்கு, “எந்த திமுக மேடையில் அதை உறுதிப்படுத்தினோம்? அதை அவரிடமே கேளுங்கள்; எங்களிடம் ஏன் கேட்கிறீர்கள்?என அமைச்சர் பதில் அளித்தார்.

# அரியலூர் மாவட்டத்தில் கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் பொதுவிழா மாவட்ட ஆட்சித்தலைவர்இரத்தினசாமி,தலைமையில் நடைபெற்றது.

அரியலூர், நவ.18–

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், நடுவலூர் பாரத மாதா ஆர்.சி.மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின சார்பில் கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் பொதுவிழா மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, தலைமையில் நடைபெற்றது.



புற்று நோய்கள் இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்திலும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. ஆனால் அது பற்றிய விழிப்புணர்வு மற்றும் உரையாடல் மிகவும் குறைவாகவே உள்ளது. தமிழ்நாடு புற்றுநோய் ரெஜிஸ்டர் திட்டத்தின் 2021 ஆம் ஆண்டுபுள்ளி விவரப்படி, தமிழ்நாட்டில் பெண்களில் 11ல் ஒருவரும், ஆண்களில் மத்தியில் 12 ல் ஒருவரும், அவர்களது வாழ்நாளில் ஏதோ ஒரு கட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர்.

தமிழ்நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்களை பொறுத்தவரை கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய்கள் மட்டுமே சுமார் 42 சதவீதம் உள்ளன. தமிழ்நாட்டில் மாநில அளவில் மார்பக புற்றுநோய் முதலிடத்திலும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் இரண்டவது இடத்திலும் உள்ளன. ஆனால், அரியலூர் உட்பட 5 மாவட்டங்களில் (தர்மபுரி, பெரம்பலூர்,திருவண்ணாமலை, விழுப்புரம்) கர்ப்பப்பை வாய் புற்றுநோய ;முதலிடத்திலும், மார்பக புற்றுநோய் இரண்டாவது இடத்திலும் உள்ளன. மற்ற புற்று நோய்களுடன் ஒப்பிட்டு பார்க்கையில் இந்த இரண்டு புற்று நோய்களும் ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் உயிரிழப்புகளை தவிர்க்கலாம். மேலும் அறிகுறிகள் இல்லாதபோது குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து பரிசோதனை செய்வதன் மூலம் பெரும்பான்மையான கர்ப்பப்பை வாய் புற்றுநோய்களை வரும் முன்பே தடுக்க முடியும்.

இதனடிப்படையில், தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஆதரவுடன், புற்றுநோயின் கட்டுப்பாட்டை பலப்படுத்த “தமிழ்நாட்டில் தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் மற்றும் தடுக்கும் திட்டம் ஒன்றை கடந்த நான்கு வருடங்களாக செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் இரண்டு முன்னோட்ட மாவட்டங்களில் அரியலூர் ஒரு மாவட்டமாகும். இத்திட்டதின கீழ் அரியலூர் மாவட்டத்தில் 30 வயதிற்கும் மேற்பட்ட அனைத்து மகளிரும் பெண் சுகாதார தன்னார் வலர்கள் மூலம் தனிப்பட்ட அழைப்பிதழ் கொடுத்து கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் தொடர் பரிசோதனைக்கு நேரடியாக அழைக்கப்படு கிறார்கள்.

மேலும் சமுதாயத்தில் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, தா.பழூர் வட்டாரத்திற்குட்பட்ட மகளிர் சுய உதவிகுழு தலைவிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. பயிற்சியில் பங்கு பெற்ற ஒரு சில சுய உதவி குழுக்கள் தங்களது கலைத்திறனை நிரூபிக்கும் வகையில் புற்றுநோயை பற்றிய தவறான நம்பிக்கைகளை போக்கும் வகையிலும் அதன் மீது உள்ள பயத்தை போக்கும் வகையிலும் கலைப்போட்டியில் பங்கேற்று ஓவியங்களையும், கவிதைகளையும் படைத்தனர்.

அதன்படி புற்றுநோய்களை தீவிரமாக எதிர்த்துப் போராடுவதற்கான அவர்களின் விருப்பத்தை அங்கீகரிப்பதோடு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பரிசோதனை செய்வதன் மூலம் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதே இன்றைய சூழலில் பெண்களின் ஆரோக்கியம் மற்றும் அவர்களின் குடும்பங்களின் செழிப்பைப் பாதுகாப்பதற்கான வழி என்ற செய்தியைப் பரப்புவதற்கு அவர்களின் பங்களிப்பைப் பாராட்டுகிறது. இதனை கருப்பொருளாக வைத்து, அவர்கள் உருவாக்கிய ஒரு சில சிறந்த கவிதைகள் தொகுக்கப்பட்டன. மேலும், 22 குழுக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், வாய்ப் புற்றுநோயுடன் கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பகப் புற்றுநோய்களுக்கான ஸ்கிரீனிங் சேவைகள் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் இலவசமாகக் கிடைக்கின்றன. அதே நேரத்தில் மாவட்டம் முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட துணை சுகாதார நிலையங்களில் இந்த பரிசோதனைகள் வழங்கப்பட உள்ளன. தமிழ்நாட்டில் உள்ள 30 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்துப் பெண்களும் தங்கள் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்காக தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கவும், தொடர்ச்சியான கர்ப்பப்பை வாய் மற்றும் மார்பக புற்றுநோய் பரிசோதனையை மேற்கொள்ளவும் வலுவாக ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்நிகழ்வில் அரியலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரகவாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் தேன்ராஜ், அரியலூர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.மணிவண்ணன், ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தப்படும் தமிழகத்தில் தொற்றா நோய்களை கட்டுப்படுத்தும் மற்றும் தடுக்கும் திட்டத்தின் உதவி தலைமை ஆலோசகர் .நவோமி இமானி,பொதுமக்கள்,மருத்துவ அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## செம குஷியில் எடப்பாடி.

# சேலத்தில் இரவோடு இரவாக அதிமுக’வில் கூண்டோடு ஐக்கியம்.

சேலம், நவ. 18–


தமிழகத்தில் 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலை நோக்கி அரசியல் கட்சிகள் அனைத்தும் தீவிரமாக களத்தில் இறங்கி பணியாற்றி வருகின்றன.

குறிப்பாக பாஜகவுடன் கூட்டணி வைத்துள்ள இபிஎஸ் இந்த முறை அதிமுக ஆட்சியை தமிழகத்தில் நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வருகிறார். அதேசமயம் அதிமுகவில் இபிஎஸ் மீது அதிருப்தியை வெளிப்படுத்தும் நிர்வாகிகள் பலரும் கட்சியிலிருந்து தொடர்ந்து நீக்கப்பட்டு வருகிறார்கள். இது ஒரு பக்கம் இருந்தாலும் மறுபக்கம் மாற்று கட்சியினரை தங்கள் கட்சியில் இணைக்கும் முயற்சியிலும் இபிஎஸ் தீவிரம் காட்டி வருகிறார்.



இந்நிலையில் சேலம் மாவட்டம் எடப்பாடி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் பக்க நாடு மாதேஷ் ஏற்பாட்டில் இருப்பாளி ஊராட்சி, செவிடனூர் திமுக கிளைச் செயலாளர் ராஜா தலைமையில் கட்சியை சேர்ந்த 50க்கும் மேற்பட்டோர் அதிமுக பொதுச்செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியை சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள அவருடைய இல்லத்தில் நேரில் சந்தித்து அதிமுகவில் தங்களை அடிப்படை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு எடப்பாடி பழனிச்சாமி சால்வை அணிவித்து வரவேற்றார்.

# ஸ்ரீ சுகநாராயணப் பெருமாள் கோவில் பவித்ரோத்சவ வைபவம்



வந்தவாசி, நவ 18:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த சளுக்கை கிராமத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுகந்தவல்லி நாயிகா சமேத ஸ்ரீ சுகநாராயணப் பெருமாள் கோவிலில் மூல மூர்த்திகள் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு பவித்ரோத்ஸவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. முன்னதாக பால், தயிர், சந்தனம், இளநீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டுவிசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. பிறகு திருப்பவித்ரம் சமர்ப்பிக்கப்பட்டு, மேள வாத்தியங்களுடன் மாலை மஹாபூர்ணாஹூதியுடன் பெருமாள் உள்புறப்பாடு நடந்தேறியது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் தீர்த்த பிரசாதங்கள் வழங்கப்பட்டது.

# திருவள்ளூர் அடுத்த காக்களூரில் உள்ள அலுமினியம் உருக்கும் தொழிற்சாலையில் அலுமினிய பிழம்பு வெடித்து சிதறி விபத்து:

## இருவர் படுகாயம் : பாதுகாப்பு உபகரணங்கள் வழங்காமல் வேலை வாங்கியதாக போலீசில் புகார்

திருவள்ளூர் நவ 18 :

திருவள்ளூர் அடுத்த காக்களூர் தொழிற்பேட்டையில் விநாயகா மெட்டல் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையை கருணாகரன் என்பவர் நடத்தி வருகிறார் . செயல்பட்டு வருகிறது. இங்கு அலுமீனியத்தை உருக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிறுவனத்தில் பகல் மற்றும் இரவு பணியில் 40க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில் வட மாநிலத்தைச் சேர்ந்த 4 பணியாளர்கள் இரவு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது தொழிற்சாலையில் இருந்த. அலுமீனியத்தை உருக்கும் பாய்லரில் ஈரமான அலுமினியத்தை உருக்க பாய்லரில் போட்ட நிலையில் திடீரென வெடித்து சிதறி அலுமீனிய தீப்பிழம்புகள் வடமாநில தொழிலாளர்கள் மீது விழுந்தது. இந்த விபத்தில் நிறுவனத்தில் பணியில் இருந்த சிவக்குமார் மற்றும் இந்திரபூஷன் ஆகிய இரண்டு வட மாநில இளைஞர்களும் 80 சதவீதம் தீக்காயம் அடைந்தனர்.

வெடி சத்தம் கேட்டு அருகில் இருந்தவர்கள் இரண்டு வட மாநில இளைஞர்களையும் மீட்டு தீக்காயங்களுடன் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அளிக்கப்பட்ட நிலையில் முதல் சிகிச்சைக்குப்பின் ஆபத்தான நிலையில் மேல் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருவள்ளூர் அருகே தொழிற்சாலையில் அலுமீனியத்தை உருக்கும் பாய்லரின் பிழம்புகள் வெடித்துச் சிதறியதில் இருவர் படுகாயம் அடைந்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு உபகரணங்கள் கொடுக்காமல் வேலை வாங்கியதாக பாதிக்கப்பட்ட இந்திரபூஷன் என்பவர் திருவள்ளூர் தாலுகா போலீசாரிடம் கொடுத்த புகாரையடுத்து காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து உரிமையாளர் கருணாகரனிடம் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் டிசம்பர் 6ம் தேதி தங்கத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும் என அறிவிப்பு

காஞ்சிபுரம்: நவ.18–

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் டிசம்பர் 6ம் தேதி தங்கத்தேர் வெள்ளோட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குடமுழுக்கை ஒட்டி தங்கத்தேர் வெள்ளோட்டம் டிசம்பர் 6ம் தேதி நடைபெறவுள்ளது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு டிச.8ம் தேதி குடமுழுக்கு நடைபெறவுள்ளது.

# செஞ்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம் வழங்கும் பணி

## விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்



விழுப்புரம், நவ.18–

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான கணக்கிட்டு படிவம் வழங்கும் பணி விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்று வருகிறது. செஞ்சி ஒன்றியம் கோணை ஊராட்சி பாகம் எண் 237, 240 அப்பம்பட்டு மற்றும் கவரை ஊராட்சி பாகம் எண் 284 கவரை மெயின் ரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருதற்கான கணக்கீட்டு படிவம் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்திற்கான பணிகளை திமுக நிர்வாகிகள், பாகம் முகவர்கள். டிஜிட்டல் ஏஜென்ட் நிர்வாகிகள் மிகுந்த கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும் என நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, வனக்குழு தலைவர் ராமு,மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் வாகித், நிர்வாகிகள் மணிபாலன், வீரப்பன், முத்து, நாகமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வேளாண்மை துறையின் சார்பில் பயிர் காப்பீட்டு திட்ட விழிப்புணர்வு பிரச்சார வானத்திினை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## மாநில அளவிலான கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ள சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவிகள் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ வைசந்தித்து வாழ்த்து பெற்றனர்.



விழுப்புரம், நவ.18–

விழுப்புரம் மாவட்டம்கல்வித்துறை சார்பில் மாவட்ட அளவில் 19 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கால்பந் துவிளையாட்டுப் போட்டிகள் மயிலம் பவ்டா கல்லூரியில் நடைபெற்றது. இப்போட்டியில் செஞ்சி ஒன்றியம் சத்தியமங்கலம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 11, 12ஆம்வகுப்பு படிக்கும் 18 பள்ளி மாணவிகள்கலந்து கொண்டு கால்பந்து போட்டியில்பங்கேற்று மாவட்ட அளவில் முதலிடம் பெற்றுமாநில அளவிலான கால்பந்து போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

19.11.25 அன்று மாநில அளவில் நடைபெறும் கால்பந்து போட்டியில் பங்கேற்கும் மாணவிகள் செஞ்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏவைநேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். மாநில அளவில் நடைபெறும் கால்பந்து போட்டியில் பங்கேற்கும் மாணவிகளுக்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார். மேலும் விளையாட்டுப் போட்டி களில் பங்கேற்கும் மாணவிகளுக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை அவர் வழங்கினார். இதேபோல் கலை திருவிழாவில் பரதநாட்டியத்தில் மாவட்ட அளவில் வெற்றி பெற்று மாநில அளவில் பங்கேற்றம் மாணவிகளும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏவிடம் வாழ்த்து பெற்றனர்.

இதில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், பள்ளி தலைமை ஆசிரியர் சச்சிதானந்தம், பள்ளி ஆசிரியர்கள் திருமலை, ஸ்ரீ திலிப், ஹாஜா பாஷா, உடர்கல்வி ஆசிரியர்கள் ஆனந்தராஜ், பழனிராஜ், மாவட்டபிரதிநிதி அய்யாதுரை, தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## அரியலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவங்கள் BLO App –ல் பதிவேற்றம் செய்யும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, நேரில் ஆய்வு.



அரியலூர், ந. 18–

அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத் தப்பணிக்கு வாக்காளர்களால் நிரப்பப்பட்ட முன் அச்சிடப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் வாக்குசாவடி நிலை அலுவலர்களால் பெறப்பட்டு BLO Appல் பதிவேற்றம் செய்யும் பணிகள் நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அரி;யலூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணி பல்வேறு கட்டங்களாக 28.10.2025 முதல் 07.02.2026 வரை நடைபெறுகிறது. இந்த சிறப்பு தீவிர திருத்த பணியில் அரியலூர் மாவட்டத்திலுள்ள 2 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 596 வாக்குசாவடி நிலை அலுவலர்களால் வீடு வீடாக சென்று வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் உள்ள 2 சட்டமன்ற தொகுதி களிலும் 5,30,890 எண்ணிக்கையிலான வாக்காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இது நாள் வரை 97% படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் மீளப்பெற்று தேர்தல் ஆணையத்தின் பிரத்யேக செயலியில் பதிவேற்றம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

அதன்படி அரியலூர் வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 149 அரியலூர் சட்டமன்ற தொகுதி மற்றும் 150 ஜெயங் கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கு வாக்காளர்களால் நிரப்பப்பட்ட முன் அச்சிடப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் வாக்குசாவடி நிலை அலுவலர்களால் பெறப்பட்டு BLO Appல் பதிவேற்றம் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, படிவங்களில் நிரப்பப் பட்டுள்ள விவரங்களை விடுபடாமல் எவ்வித பிழையுமின்றி துல்லியமாக BLO Appல் பதிவேற்றம் செய்திட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மல்லிகா, அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பிரேமி, இதர அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வேல்ஸ் குழுமம் சார்பில் பயிர் அமைப்பு முறை நுட்பங்களுக்கான பயிற்சி



வந்தவாசி, நவ 18:

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம் (VISTAS), பல்லாவரம் சென்னை117 சார்பில் திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளார் ஒன்றியம் ஆதிதிராவிடர் சமூகத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக, திரக்கோயில் கிராமத்தில் தொழில் நுட்பம் சார்ந்த உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதலுக் கான DST SEED STI HUB மையம் ( DST/ SEED//SCSP STI / 2022/937) மூலம் திருவண்ணாமலை மாவட்டத்தின் “சிறந்த பயிர் அமைப்பு முறை நுட்பங்களை பின்பற்றுவதற்கான பயிற்சி” 2025 நவம்பர் 15 – 16ஆம் தேதிகளில் வந்தவாசி அடுத்த தெள்ளார் வட்டம் VISTAS DST SEED STI- HUB மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் வேல்ஸ் பல்கலைக்கழக பேராசிரியரும், இயந்திரவியல் துறை இயக்குனருமான முனைவர் எம்.சந்திரசேகரன் நிகழ்வை தொடங்கி வைத்து இந்த மையத்தின் சாதனைகளையும், விவசாயிகள் அதிகப்படியான லாபங்கள் ஈடுட்டும் முறைகளை விளக்கினார். DST SEED STI - HUB திட்டத்தின் ஆலோசகரும், வேல்ஸ் பல்கலைக்கழக துணை வேந்தர் (பொறுப்பு) முனைவர் எம்.பாஸ்கரன் தொடக்க விழாவினை கௌரவித்து,

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பல்வேறு விதமான பயிர் அமைப்பு முறை தொழில் நுட்பங்களை விளக்கி, அதிகப்படியான லாபம் ஈட்டும் பயர்களை உற்பத்தி செய்து விளைபொருட்களை மதிப்புக் கூட்டி லாபம் ஈட்டும் முறைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்.

இரண்டாம் நாள் பயிற்சியினை வேல்ஸ் பல்கலைக்கழக உதவி பேராசிரியர் முனைவர் எம்.குமரேசன் மற்றும் வேல்ஸ் பல்கலைக்கழக முனைவர் எம்.அன்பரசு ஆகியோர் வேளாண்மையில் பல்வேறு விதமான பயிர்களையும், அதில் லாபம் ஈட்டுவது பற்றியும் செயல் விளக்கம் அளித்தனர். மேலும் இப்பயிற்சியில் DST STI- HUB திரக்கோயில் கிராமத்தில் பணி புரியும் இரா.விஜயகுமார், வி. லக்ஷ்மி, பூவரசன், பிரசாந்த், இளையபெருமாள் மற்றும் ஏ.மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் தெள்ளாறு ஒன்றியத்தின் கிராமங்களில் இருந்து 150 க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். இறுதியில் STI HUB திரக்கோயில் முனைவர் சம்பத்குமார் நன்றி கூறினார்.




திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி மிகவும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஜலகண்டேஸ்வரர் மற்றும் ரங்கநாத பெருமாள் கோவில் எதிரே தினந்தோறும் கொட்டப்படும் குப்பைகளால் துர்நாற்றம் வீசுகிறது. மேலும் தெரு மாடுகள் மேயும் சூழ்நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமின்றி பொதுமக்களுக்கும் இடையூறாக உள்ளது. எனவே நகராட்சி இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உச்சம் தொட்ட முட்டை விலை... நாமக்கல் பண்ணையாளர்கள் மகிழ்ச்சி..

ஈரோடு. நவ. 18

நாமக்கல் மண்டலத்தில் முட்டைகளின் விலை உச்சம் தொட்டு உள்ளது. இதன் காரணமாக நாமக்கல் கோழிப்பண்ணை உரிமையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோழி பண்ணை வரலாற்றில் முதல் முறையாக, பண்ணை முட்டை கொள்முதல் விலை ஆறு ரூபாய் வரை உயர்ந்து முட்டையின் விலை புதிய உச்சத்தை தொட்டுள்ளது.

நாமக்கல் மண்டலத்தில் தினமும் 6 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. முட்டை கொள்முதல் விலையை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு தினமும். நிர்ணயம் செய்கிறது. கடந்த 2024 இல் டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி முட்டையின் பண்ணை கொள்முதல் விலை ஐந்து ரூபாய் 90 காசுகளாக இருந்து முட்டை வரலாற்றில் உச்ச பட்ச விளையாக இருந்து.

கடந்த 14ஆம் தேதி மீண்டும் 5 ரூபாய் 90 காசுகளை தொட்ட, நிலையில், ஐந்து ரூபாய் 95 காசுகளாக நேற்று முன்தினம் உயர்ந்து, முந்தைய விலையை முறியடித்தது.

இந்த நிலையில் நெட் மண்டல சிங்கராஜ் தலைமையில் நடைபெற்ற ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில், முட்டையின் விலை ஆறு ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டது.

இதன் மூலம் முதல் முறையாக முதல் முறையாக ஆறு ரூபாயை எட்டி, முட்டையின் விலை உச்சம் தொட்டு நிற்கிறது. இதன் காரணமாக பண்ணையாளர்கள் மகிழ்ச்சி.

அதே சமயம் ஒரு கிலோ முட்டை கோழி 112 ரூபாய், ஒரு கிலோ கறிக்கோழி 104 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது. உச்சம் தொட்ட இந்த முட்டை விலை உயர்வு காரணமாக முட்டை விரும்பிகள் சற்றே அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

## பிளவக்கல் பெரியாறு அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு!

ஸ்ரீவில்லிபுத்தூர்: நவ.18–

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள பிளவக்கல் பெரியாறு அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு 150 கன அடி வீதம் அடுத்த 7 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்பட உள்ளது. அமைச்சர் கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், ஆட்சியர் சுகபுத்ரா ஆகியோர் அணையில் தண்ணீரை திறந்து வைத்தனர்.

## அடிசியா டெவலப்பர்சின் கோவை அலெர்ட் எனும் விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கம்




கோவை நவ:18

கோவையில் பாதுகாப்பான நிலங்களை வாங்கும்நடைமுறைகளை ஊக்குவிக்க, அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனம் அலெர்ட் கோவை” எனும் பிரச்சாரத்தை துவங்கி உள்ளது.

முன்னதாக அலெர்ட் கோவை பிரச்சாரத்தை கோவை விழாவின் ஒரு பகுதியாக கொடிசியா மைதானத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி, கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர், கோவை மாநகர காவல் ஆணையர் சரவண சுந்தர், கோவை மேயர் ரங்கநாயகி ஆகியோர் துவக்கி வைத்தனர்.இது தொடர்பான செய்தியாளர்கள் சந்திப்பு கோவை அவினாசி சாலையில் உள்ள தனியார் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது.

இதில் செய்தியாளர்களிடம் பேசிய அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மணிகண்டன் பேசினார். ரியல் எஸ்டேட் துறையில் தொடர்ந்து பொது மக்கள் பயன் பெறும் விதமாக பல புதிய திட்டங்களை அறிமுக படுத்தி வருவதாக கூறிய அவர்,அந்த வரிசையில் அலெர்ட் கோவை எனும் பிரச்சாரத்தை துவக்கி உள்ளதாக தெரிவித்தார்.

இந்த முயற்சி கோவையில் முதன் முறையாக துவக்கி உள்ளதாக குறிப்பிட்ட அவர்,விரைவில் தமிழகம் முழுவதும் இந்த சேவையை கொண்டு செல்ல உள்ளதாக தெரிவித்தார்.

பிரச்சாரத்தின் முதல் கட்டமாக, நிலம் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வாங்குவதில் ரேரா வழிகாட்டுதல் குறித்து விழிப்புணர்வு இயக்கத்தைத் தொடங்கி உள்ளதாக கூறினார்.

இன்னும் சில தினங்களில் இதற்கென தனியாக இரண்டு மையங்கள் அமைத்து காலி மனை மற்றும் வீடு வாங்குபவர்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களை இலவசமாக வழங்க உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது அடிசியா டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் மனித வள மேம்பாடு துணை தலைவர் கிங்ஸ்டன்,இயக்குனர் செந்தில் குமார்,சி.ஆர்.ஓ. சிவக்குமார்,விற்பனை பிரிவு துணை தலைவர் ஸ்ரீனிவாசன்,ஆகியோர் உடனிருந்தனர்.

## 35 வயதில் கள்ளக்காதலியை கொன்ற கூலி தொழிலாளி 25 வருடம் கழித்து 60 வயதில் கைது செய்த போலீஸ் திடுக்கிடும் பின்னணி.

சேலம், நவ.18–

திருமணத்தை மீறிய உறவில் இருந்த பெண்ணை அடித்துக் கொன்ற நபர் 25 வருடங்களுக்கு பிறகு போலீசில் சிக்கிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டம் ஓமலூர் பகுதியை சேர்ந்த சாமிநாதன் என்பவர் முன்னாள் ராணுவ வீரர். இவருக்கு ராணி என்ற மனைவி உள்ளார். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்த இவர்களின் வாழ்வியல் புயல் வீசியது போல ஒரு சம்பவம் நடந்துள்ளது. தன்னுடைய விபரீத ஆசையால் தனக்கு இப்படி ஒரு துன்பம் நேரும் என்று ராணி கனவில் கூட நினைத்து பார்த்திருக்க மாட்டார். ராணிக்கு அதே ஊரை சேர்ந்த கூலி தொழிலாளி நல்ல தம்பி என்பவருடன் பழக்கம்ஏற்பட்டு கள்ளக்காதலாக மாறியுள்ளது. இதனை அறிந்த ராணியின் கணவர் இருவரையும் கண்டித்ததால் கடந்த 2000 ஆம் ஆண்டில் ராணி நல்ல தம்பியுடன் இருந்த தொடர்பை துண்டித்துள்ளார்.

இதனால் நல்ல தம்பி ஆத்திரத்தில் இருந்த நிலையில் தொடர்ந்து ராணியிடம் தகராறில் ஈடுபட்டுள்ளார். ஒரு நாள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் முற்றியதால் ராணியை கட்டையால் தலையில் அடித்து நல்ல தம்பி கொலை செய்துள்ளார். கொலை செய்துவிட்டு உடனே தப்பி சென்று தலைமறைவாகி விட்டார். நீண்ட நாட்களாக நல்ல தம்பியை பிடிக்க முடியாமல் போலீசார் தேடி



வந்தனர். இதனிடையே சொந்த ஊரை விட்டு வெளியே சென்ற நல்ல தம்பி ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை இங்கு வந்து தனது உறவினர்களை பார்த்து செல்வதாக போலீசுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து நேற்று உம்பிலிக்கம் பட்டிக்கு வந்த நல்ல தம்பியை (60) போலீசார் கைது செய்தனர். அவரை கைது செய்து விசாரித்ததில் பல திடுக்கிட்டு உண்மைகள் வெளிவந்தது. அதாவது கடந்த 2000 ஆண்டில் தகாத உறவை துண்டித்துக் கொண்டதால் ராணியை கொலை செய்துவிட்டு ஆந்திராவுக்கு தப்பி சென்றுள்ளார். அங்கு ஓட்டலில் தொழிலாளியாக வேலை பார்த்து காலத்தை கடத்தி வந்துள்ளார். அடிக்கடி சொந்த ஊருக்கு சென்று உறவினர்களை பார்த்து வந்ததாக போலீஸில் தெரிவித்துள்ளார். காதலியை கொலை செய்துவிட்டு தலைமறைவான கொலையாளியை 25 ஆண்டுகள் கழித்து போலீசார் கைது செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்..

## 252 மனுக்கள் வரப்பெற்று மேல் நடவடிக்கைகளுக்கு உத்தரவு..



ஈரோடு. நவ 18

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் வந்திருந்து மனுக்களை கொடுத்தனர்.

வாரம் தோறும் திங்கள் கிழமை காலை பொதுமக்களுக்கான மக்கள் குறைதீர்க்கும் முன்னால் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அந்த வகையில் நேற்று காலை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் பொதுமக்களுக்கான குறை தீர்க்கும் நாள் கூட்டம்.

ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர்சு. சாந்தகுமார் கூட்டத்திற்கு தலைமை தாங்கி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.

அந்த வகையில் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 252 மனுக்கள் வரப்பெற்று மேல் நடவடிக்கைகளுக்கு. உத்திரவிடப்பட்டது.

பொதுமக்கள் அளித்த மனுக்களில், பட்டா, இலவச வீட்டு மனை கோருதல், வீட்டுமனை பட்டா, மற்றும் விதவைகள் உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, கலைஞரின் மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட திட்டங்களின் கீழ் நிதி உதவி கோருதல், பள்ளிக் கல்லூரி மாணவ மாணவிகளுக்கான கல்வி உதவித்தொகை கோருதல் உள்ளிட்ட மனுக்கள் பொது மக்களால் கொடுக்கப் பட்டது. மற்றும் மாற்று திறனாளிகளுக்கான உதவித்தொகை கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை உள்ளிட்ட மனுக்களும் பொதுமக்களால் கொடுக்கப்பட்டது.

மேலும் முதலமைச்சரின் தனிப்பிரிவுக்கு அனுப்பப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று நடந்த இந்த குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்( பொது) முகமது குதுரத்துல்லா சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் இருந்து சபரிமலை செல்லும் பக்தர்கள் அச்சப்பட வேண்டாம்: பொது சுகாதாரத் துறை!

சென்னை: நவ.18–

தமிழ்நாட்டில் இருந்து சபரிமலை செல்லும் பக்தர்கள் அச்சப்பட வேண்டாம் என தமிழ்நாடு பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. கேரளாவில் மூளையை தின்னும் அமீபா நோய் பரவி வரும் நிலையில், சுகாதாரத் துறை விளக்கம் அளித்துள்ளது. கொரோனா தொற்று போல மூளையை தின்னும் அமீபா நோய் பரவாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம்..

## 500 கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவ குழுவினர்...



ஈரோடு. நவ. 18

ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே நடைபெற்ற சிறப்பு கால்நடை மருத்துவ முகாமில் 500க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

தமிழ்நாடு முழுவதும் கால்நடை மற்றும் பராமரிப்புத்துறை சார்பில் கால்நடைகளுக்கான நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சைகள் மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பணிகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் ஈரோடு மாவட்டம் கொடுமுடி அருகே உள்ள அஞ்சூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட, நல்ல செல்லிபாளையம் கிராமத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.

இந்த சிறப்பு கால்நடைகள் மருத்துவ முகாமிற்கு, அஞ்சூர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் எஸ் பிரகாஷ் மற்றும் துணைத் தலைவர் சரண்யா செந்தில்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஈரோடு மண்டல கால்நடைகள் துறை இணை இயக்குனர் எஸ். பாஸ்கர் மற்றும் கால்நடைகள் துறை உதவி இயக்குனர் ஆர். எத்திராஜன் ஆகியோரின் மேற்பார்வையில் இந்த முகம் சிறப்பாக நடைபெற்றது.

இந்த முகாமில் அஞ்சூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் தங்களின் கால்நடைகளை முகாமிற்கு அழைத்து வந்து பல்வேறு சிகிச்சைகள் பெற்று பயனடைந்தனர்.

இந்த முகாமில் கால்நடைகளுக்கான, பசு, எருமை, ஆடு, கோழி, நாய் ஆகிய கால்நடைகளுக்கு குடல் புழு நீக்கம், சினை பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், கோழிகளுக்கு வெள்ளை கழிச்சல் நோய் தடுப்பூசி, நாய்களுக்கு வெறி நோய் தடுப்பூசி உள்ளிட்ட கால்நடைகளுக்கான சிகிச்சைகள் சிறப்பாக அளிக்கப்பட்டது.

இதுபோன்று சிகிச்சைகள் 500க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு இந்த சிறப்பு கால்நடைகள் மருத்துவ முகாமில் அழைக்கப்பட்டது.

இந்த சிறப்பு கால்நடை முகாமில் வெங்கமேடு புதூர் கால்நடை உதவி மருத்துவர் நந்தகுமார், தாமரை பாளையம் கால்நடை ஆய்வாளர் திருமதி சண்பகம், அஞ்சூர் கால்நடை பராமரிப்பு உதவியாளர் நிதியரதி, தழுவம் பாளையம் கால்நடை பராமரிப்பு உதவியாளர் தனசேகரன், மற்றும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் இந்த சிறப்பு கால்நடை மருத்துவ முகாமில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த முகாமில் 3 சிறந்த கால்நடை வளர்ப்போருக்கான மேலாண்மை விருதுகளும், மூன்று சிறந்த கிடாரி கன்றுகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

இந்த சிறப்பு கால்நடை முகாமிற்கான ஏற்பாடுகளை அஞ்சூர் கால்நடை மருத்துவர் டாக்டர் வனிதா முன்நின்று சிறப்பாக செய்திருந்தார்.

# சங்கராபுரம் அருகே பூட்டை கிராமத்தில் தாய் தந்தையை இழந்து தவித்து நிற்கும் 4 குழந்தைகள்.

## தமிழ்நாடு முதலமைச்சர் உதவி செய்ய வேண்டும் என கண்ணீர் மல்க கோரிக்கை.

சங்கராபுரம் நவ 18

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே பூட்டை கிராமத்தில் தந்தையின் இறுதி சடங்கு செலவுக்கு பணம் இல்லாமல் அவரது குழந்தைகள் பரிதவித்தார்கள்.

ஏழு வருடங்களுக்கு முன்பே தாயையும் பறிகொடுத்த குழந்தைகள், தற்போது தந்தையையும் இழந்தனர். யாருமே இல்லாத நிலையில், தந்தையின் இறுதி சடங்கு செலவுக்கு கூட காசில்லாமல் தவித்தனர். இதனை கண்ட கிராம மக்கள் வீடு வீடாக பணம் வசூலித்து உடலை அடக்கம் செய்தனர். இந்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் அருகே உள்ளது பூட்டை கிராமம். இங்கு 46 வயதாகும் கமலக்கண்ணன் என்பவர் வசித்து வந்தார். கூலி தொழிலாளியான இவருக்கு, வசந்தா (40) என்ற மனைவியும், லாவண்யா (24), ரீனா (21), ரிஷிகா (17) ஆகிய 3 மகள்களும், அபினேஷ் (13) என்ற மகனும் இருந்தார்கள்.

இதில் வசந்தா உடல்நலம் பாதிக்கப்பட்டு கடந்த 7 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இதனால் கமலக்கண்ணன் கூலி வேலை செய்து தனது குழந்தைகளை பள்ளி, கல்லூரியில் படிக்க வைத்து வந்துள்ளார். இந்த நிலையில் கமலக்கண்ணனுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவரை சிகிச்சைக்காக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள்.அங்கு அவரை டாக்டர்கள் பரிசோதனை செய்த போது சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருந்ததாக கூறினார்கள்.

இதையடுத்து கமலக் கண்ணன் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு கடந்த 4 மாதங்களாக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வந்தார். இதனால் வருமானம் இல்லாததால் குடும்பம் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டது. பொறியியல் படித்து வந்த அவரது மகள் லாவண்யா கல்வி கட்டணத்தை செலுத்த முடியாமல் தனது படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டார். அதே போல் 8ம் வகுப்பு படித்து வந்த ரீனா, 10ம் வகுப்பு படித்து வந்த ரிஷிகா ஆகியோரும் தங்கள் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டார்கள். அபினேஷ் மட்டும் பூட்டையில் அரசு உதவிபெறும் பள்ளியில் 8ம் வகுப்பு படித்து வருகிறார்.

இந்த நிலையில் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த கமலக்கண்ணன் சிகிச்சை பலனின்றி கடந்த நவம்பர் 14ந் தேதி காலமானார். இதையடுத்து அவரது உடல் அடக்கம் செய்வதற்காக சொந்த ஊருக்கு கொண்டு வரப்பட்டது. தகவல் அறிந்து வந்த உறவினர்கள், கிராம மக்கள் கமலக்கண்ணன் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். ஆனால் தாய், தந்தையை இழந்த 4 குழந்தைகளும் தந்தையின் உடலை அடக்கம் செய்ய பணம் இல்லாமல் பரிதவித்தனர். உறவினர்களும் ஏழ்மையான நிலையில் இருந்ததால் அவர்களாலும் உதவி செய்ய முடியாத சூழ்நிலை இருந்தது.

இதை கண்ட கிராம மக்கள், அந்த குழந்தைகளின் நிலை கண்டு கலங்கி போனார்கள். அத்துடன் கிராம மக்களே கமலக்கண்ணனின் உடலை அடக்கம் செய்ய தாங்களாகவே முன்வந்தார்கள். இதையடுத்து கிராம மக்களே வீடு வீடாக சென்று பணம் வசூலித்து கமலக்கண்ணனின் உடலை முன்னின்று அடக்கம் செய்தனர். உடல்நலக்குறைவால் இறந்த தந்தையின் இறுதி சடங்கு செலவுக்கு பணம் இல்லாமல் அவரது குழந்தைகள் தவித்ததை கண்டு கிராம மக்கள் தாங்களாகவே முன்வந்து உடலை அடக்கம் செய்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

அதே நேரம் தாய் தந்தை இல்லாததால் தற்போது பள்ளிப்படிப்பை கைவிட்டுள்ள குழந்தைகளை அரசு பொறுப்பேற்று படிக்க வைக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. அதேபோல் கல்லூரி படிப்பை கைவிட்ட பெண்ணுக்கும் உதவி செய்து அரசு படிக்க வைக்க வழிவகை செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்துள்ளது.

# அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு கல்வி உதவித்தொகைகள் மற்றும் அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வழங்கினார்.

அரியலூர், நவ.18–

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட மேலாளர் அலுவலகம், தாட்கோ மூலம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் உறுப்பினர்கள் 15 நபர்களுக்கு கல்வி உதவித்தொகைக்கான காசோலைகள் மற்றும் 14 நபர்களுக்கு நலவாரிய அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் இரத்தினசாமி, (17.11.2025) வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தாட்கோ சார்பில் நன்னிலம் மகளிர் நிலவுடைமை திட்டம் மற்றும் நிலம் மேம்பாட்டுத்திட்டம், தொழில் முனைவோர் திட்டம், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் வாயிலாக கடனுதவிகள் மற்றும் மானியங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள், தூய்மை பணியாளர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு திருமண உதவி, மகப்பேறு, கல்வி உதவித்தொகை, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களும், வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் வீடுகளும் வழங்கப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக இன்றையதினம் தாட்கோ மூலம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் உறுப்பினர்களின் வாரிசுதாரர்கள் 10 நபர்களுக்கு தலா ரூ.1500 மதிப்பிலும், 3 நபர்களுக்கு ரூ.1000 மதிப்பிலும், 1 நபருக்கு ரூ.4000 மதிப்பிலும், 1 நபருக்கு ரூ.6000 மதிப்பிலும் என மொத்தம் 15 நபர்களுக்கு ரூ.28,000 மதிப்பில் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகளையும், 14 நபர்களுக்கு தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரிய அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி ,வழங்கினார்.

அதன்படி கல்வி உதவித்தொகை கிடைக்கப்பெற்று பயன்பெற்ற தூய்மை பணியாளர் சூசைமேரி என்பவர் தெரிவிக்கையில், நான் வரதராஜன் பேட்டை பேரூராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது மகன் 12 ஆம் வகுப்பு மற்றும் எனது மகள் 10 ஆம் வகுப்பு கல்வி பயின்று வருகின்றனர். எனது குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிட கோரி எங்கள் ஊரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்துகொண்டு மனு அளித்தேன். எனது மனுவின் மீது நடவடிக்கை மேற்கொண்டு இன்றையதினம் எனது இரண்டு குழந்தைகளுக்கும் கல்வி உதவித்தொகைக்கான காசோலைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையானது எனது குழந்தைகளின் கல்வி தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இத்தகைய கல்வி உதவித்தொகை திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு அரசுக்கு நன்றி என திருமதி.சூசைமேரி என்பவர் தெரிவித்தார்.





இதேபோன்று தூய்மை பணியாளர் ரோகினி என்பவர் தெரிவிக்கையில், நான் உடையார்பாளையம் வட்டம், கல்லாத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தூய்மை பணியாளராக பணியாற்றி வருகிறேன். எனது மகள் 10 வகுப்பு பயின்று வருகிறார். அவரது கல்வி செலவுகளுக்காக உதவித்தொகை வேண்டி முகாமில் விண்ணப்பம் அளித்திருந்தேன். எனது கோரிக்கை மனுவினை ஏற்றுக்கொண்டு எனது மகள் கல்வி பயில்வதற்கு ஏதுவாக உதவித்தொகைக்கான காசோலை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இத்தொகை எனது மகளின் கல்விக்கு பயனுள்ளதாக உள்ளது. உதவித்தொகை வழங்கிய தமிழ்நாடு அரசுக்கு நன்றி என ரோகினி என்பவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர்.மல்லிகா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் தேன்ராஜ், தாட்கோ மேலாளர் லோகநாதன், இதர அரசு அலுவலர்கள், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**NAME CHANGE**

I, "**SUBRAMANI.M**" son of Manickam, residing at **C.15 - Poigaithirunagar, Vadugapatti Village, Manapparai, Tiruchirappalli Rural 621 307, Tamil Nadu, India my name** shall henceforth be known as "**SUBRA MANIYAN. M**" in my son GOBINATH's Passport and some of his records **as surname / father name.**

**SUBRAMANIYAN.M**

**பெயர் மாற்றம்**

சுப்ரமணி. மா த/பெ. மாணிக்கம், சி.15 பொய்கைத்திரு நகர், வடுகப்பட்டி கிராமம், மணப்பாறை, திருச்சிராப்பள்ளி 621307, தமிழ்நாடு , இந்தியா ஆகிய எனது பெயர் இனிமேற் கொண்டு **சுப்ரமணியன். மா** என்றே அழைக்கப் படும்.

சுப்ரமணியன். மா

# மதுரவாயல், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதியில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை விநியோகிக்கும் பணி

## மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் ஆய்வு



திருவள்ளூர் நவ 18 ,

மதுரவாயல் மற்றும் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளில் வாக்குசாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை விநியோகிக்கும் பணிகள் தொடர்பாகவும் இணையத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பாகவும் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

சென்னை பெருநகர மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம், மதுரவாயல் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட கோயம்பேடு தாய்ஷா தனியார் அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை விநியோகிக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, கணக்கெடுப்பு படிவங்களை துரிதமக வழங்கி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட துறைசார்ந்த அலுவலர்களுக் உத்திரவிட்டார்.

அதனைத் தொடர்ந்து அம்பத்தூர் மண்டலம், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குப்பட்ட அம்பத்தூர் மண்டல அலுவலத்தில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை விநியோகிக்கும் பணிகளை தொடர்பாகவும் அவற்றை இணையத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பாகவும் மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதில் வாக்காளர் பதிவு அலுவலரும் மத்திய சென்னை வருவாய் கோட்டாட்சியருமான எம்.சதீஷ் குமார், வாக்காளர் பதிவு அலுவலரும் உதவி ஆணையர் (ம) மண்டல அலுவலருமான ஆர்.எ.பிரபாகர், உதவி வாக்காளர் பதிவு அலுவலரும் மதுரவாயல் வட்டாட்சியருக்கான ஜி.ஜெயக்குமார். உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள்,அம்பத்தூர் மண்டல உதவி வருவாய் அலுவலர்கள் பி. லக்ஷ்மண குமார், எஸ்.கிருபாகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421